جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம்

# தொழுகையில் தக்பிர் கட்டியது முதல் ஸலாம் கொடுப்பது வரையுமான துஆக்கள்

தொகுப்பாளர் : அஷ்ஷைக் **அஸ்ஹர் யூஸுஃப்** ஸீலானி

அழைப்பாளர் – அல்கோபர் இஸ்லாமிய அழைப்பகம், தமிழ் பிரிவு

| வ.எண் | தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | தக்பீர் கட்டிய பின் | 03 |
| 2 | ருகூவில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள் | 12 |
| 3 | ருகூவிலும், ஸுஜுதுவிலும் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள் | 15 |
| 4 | ருகூவிலிருந்து எழுந்தவுடன் ஓத வேண்டிய துஆக்கள் | 20 |
| 5 | ஸுஜுதில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள் | 28 |
| 6 | நடு இருப்பில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள் | 32 |
| 7 | தொழுகையின் இருப்பில் ஓத வேண்டிய அத்தஹிய்யாத் (தஷஹ்ஹுத்) | 36 |
| 8 | தொழுகையின் இறுதி இருப்பின் ஸலவாத்து | 42 |
| 9 | தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள் | 48 |

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

1

اللَّهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ، اللَّهُمَّ نَقِّنِي مِنَ الْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ، اللَّهُمَّ اغْسِلْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ

அல்லாஹும்ம பாயித் பைனி வ பைன கதாயாய கமா பாஅத்த பைனல் மஷ்ரிகி வல் மக்(غ)ரிப். அல்லாஹும்ம நக்கினி மினல் கதாயா கமா யுனக்கஸ் ஸ(ث)வ்புல் அப்யலு மினத் தனஸ். அல்லாஹும் மக்(غ)ஸில் கதாயாய பில்மாயி வஸ்ஸ(ث)ல்ஜி வல்பரத்

இறைவா! கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே நீ ஏற்படுத்திய தூரத்தைப் போல், எனக்கும் தவறுகளுக்கும் இடையே நீ தூரத்தை ஏற்படுத்துவாயாக! இறைவா! வெண்மையான ஆடை அழுக்கிலிருந்து தூய்மைப்படுத்தப் படுவது போல் என் தவறுகளை விட்டும் என்னைத் தூய்மைப் படுத்துவாயாக! தண்ணீராலும் பனிக்கட்டியாலும் ஆலங்கட்டியாலும் என் தவறுகளைக் கழுவுவாயாக!

அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி) அவர்கள், புகாரி 744

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

2

الْحَمْدُ لِلّٰهِ حَمْدًا كَثِيرًا طَيِّبًا مُبَارَكًا فِيهِ

அல்ஹம்து லில்லாஹி ஹம்தன் கஸீ(ث)ரன் த(ط)ய்யிபன் முபாரக்கன் பீ(ف)ஹி

தூய்மையும் வளமும் வாய்ந்த அதிகமான புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது

அறிவிப்பாளர் : அனஸ்(ரலி) அவர்கள், முஸ்லிம் 1051

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

3

اللهُ أَكْبَرُ كَبِيرًا، وَالْحَمْدُ لِلَّهِ كَثِيرًا، وَسُبْحَانَ اللهِ بُكْرَةً وَأَصِيلًا

அல்லாஹு அக்பர் கபீரா, வல்ஹம்து லில்லாஹி கஸீ(ட்)ரா, வ சுப்ஹானல்லாஹி புக்ரதவ் வ அஸீலா

அல்லாஹ் மிகப் பெரியவன் என்று பெருமைப் படுத்துகிறேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது என்று அதிகமாகப் போற்றுகிறேன். அல்லாஹ் பரிசுத்தமானவன் என்று காலையிலும் மாலையிலும் அவனைத் துதிக்கிறேன்.

அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி) அவர்கள்,முஸ்லிம் 1052

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

4

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ، وَتَبَارَكَ اسْمُكَ، وَتَعَالَى جَدُّكَ، وَلَا إِلَهَ غَيْرُكَ

சுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக, வதபாரகஸ்முக, வ தஆலா ஜத்துக, வலா இலாஹ கை(ġ)ருக

இறைவா! உன்னைத் துதித்துப் போற்றுகிறேன். உனது பெயர் சுபிட்சம் வாய்ந்தது. உனது பெருமை உயர்வானது. உன்னைத் தவிர வேறு இறைவனில்லை.

முஸ்லிம் 669

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

5-1

وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِي فَطَرَ السَّمٰوَاتِ وَالْأَرْضَ حَنِيفًا وَمَا أَنَا مِنَ
الْمُشْرِكِينَ، إِنَّ صَلَاتِي، وَنُسُكِي، وَمَحْيَايَ، وَمَمَاتِي لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ،
لَا شَرِيكَ لَهُ وَبِذٰلِكَ أُمِرْتُ وَأَنَا مِنَ الْمُسْلِمِينَ. اللّٰهُمَّ أَنْتَ الْمَلِكُ لَا إِلٰهَ
إِلَّا أَنْتَ، أَنْتَ رَبِّي وَأَنَا عَبْدُكَ، ظَلَمْتُ نَفْسِي وَاعْتَرَفْتُ بِذَنْبِي فَاغْفِرْ لِي
ذُنُوبِي جَمِيعاً إِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ، وَاهْدِنِي لِأَحْسَنِ الْأَخْلَاقِ لَا
يَهْدِي لِأَحْسَنِهَا إِلَّا أَنْتَ، وَاصْرِفْ عَنِّي سَيِّئَهَا لَا يَصْرِفُ عَنِّي سَيِّئَهَا إِلَّا
أَنْتَ، لَبَّيْكَ وَسَعْدَيْكَ، وَالْخَيْرُ كُلُّهُ بِيَدَيْكَ، وَالشَّرُّ لَيْسَ إِلَيْكَ، أَنَا بِكَ
وَإِلَيْكَ، تَبَارَكْتَ وَتَعَالَيْتَ، أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ

அறிவிப்பாளர் : அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1419

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

5-2

வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லதி ப(ف)தரஸ் ஸமாவாதி வல்அர்ள ஹனிப(ف)ன். வமா அன மினல் முஷ்ரிகீன் இன்ன ஸலாதி வ நுசுகி வ மஹ்யாய வ மமாதி லில்லாஹி ரப்பில் ஆலமீன் லா ஷரீக லஹு வ பிதா(ذ)லிக உமிர்து வ அன மினல் முஸ்லிமீன்

அல்லாஹும்ம அன்தல் மலிகு லா இலாஹ இல்லா அன்த. அன்த ரப்பி வ அன அப்துக ழு(ظ)லம்து நப்(ف)ஸி வஃதரப்(ف)து பி தன்பி ப(ف)க்(غ)பி(ف)ர்லி துனூபி ஜமீஆ இன்னஹு லா யக்(غ)பி(ف)ருத் துனூப இல்லா அன்த

வஹ்தினி லி அஹ்ஸனில் அக்(خ)லாகி லா யஹ்தி லி அஹ்ஸனிஹா இல்லா அன்த. வஸ்ரிப்(ف) அன்னி ஸய்யிஅஹா லா யஸ்ரிபு(ف) அன்னி ஸய்யிஅஹா இல்லா அன்த லப்பைக வ ஸஃதைக. வல்கை(خ)ரு குல்லுஹு பியதைக. வஷ்ஷர்ரு லைஸ இலைக அனபிக வ இலைக தபாரக்த வ தஆலைத அஸ்தக்பி(ف)ருக வ அதூபு இலைக

அறிவிப்பாளர் : அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1419

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

5-3

நான் வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றிப் படைத்தவன் பக்கம் நேராக என் முகத்தைத் திருப்பிக்கொண்டேன். நான் இணைவைப்போரில் ஒருவனாக இருக்கமாட்டேன். என் தொழுகையும் என் தியாகமும் என் வாழ்வும் என் மரணமும் அனைத்து உலகின் அதிபதியான அல்லாஹ்வுக்கே உரியன. அவனுக்கு இணையே இல்லை. இவ்வாறே எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. நான் கட்டுப்பட்டு நடப்பவர் (முஸ்லிம்)களில் ஒருவன் ஆவேன்.

இறைவா! நீயே அரசன். உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என் இறைவன். நான் உன் அடிமை. எனக்கு நானே அநீதி இழைத்துக்கொண்டேன். நான் என் பாவங்களை ஒப்புக்கொள்கிறேன். எனவே, என் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! பாவங்களை மன்னிப்பவர் உன்னைத் தவிர வேறெவரும் இலர்.

நற்குணங்களுக்கு எனக்கு வழிகாட்டுவாயாக. நற்குணங்களுக்கு வழிகாட்டுபவர் உன்னைத் தவிர வேறெவரும் இலர்.

கெட்ட குணங்களை என்னிலிருந்து அகற்றுவாயாக! கெட்ட குணங்களை அகற்றுபவர் உன்னைத் தவிர வேறெவரும் இலர்.

இதோ வந்தேன். கட்டளையிடு(வாயாக !). நன்மைகள் அனைத்தும் உன் கரங்களிலேயே உள்ளன. தீமைகள் உன்னைச் சார்ந்தவை அல்ல. உன்னால்தான் நான் (நல்வாழ்வு கண்டேன்). உன்னிடமே நான் (திரும்பி வரப்போகிறேன்). நீ சுபிட்சமிக்கவன். உன்னதமானவன். நான் உன்னிடமே பாவமன்னிப்புக் கோருகிறேன். பாவங்களிலிருந்து மீண்டு உன்னிடம் திரும்புகிறேன்.

**அறிவிப்பாளர் : அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1419**

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# இரவுத் தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் ஓத வேண்டிய துஆக்கள் 6

اللَّهُمَّ لَكَ الْحَمْدُ أَنْتَ نُورُ السَّمَوَاتِ وَالْأَرْضِ، وَلَكَ الْحَمْدُ أَنْتَ قَيِّمُ السَّمَوَاتِ وَالْأَرْضِ، وَلَكَ الْحَمْدُ أَنْتَ رَبُّ السَّمَوَاتِ وَالْأَرْضِ، وَمَنْ فِيهِنَّ أَنْتَ الْحَقُّ، وَوَعْدُكَ الْحَقُّ وَقَوْلُكَ الْحَقُّ، وَلِقَاؤُكَ الْحَقُّ، وَالْجَنَّةُ حَقٌّ، وَالنَّارُ حَقٌّ، وَالنَّبِيُّونَ حَقٌّ، وَالسَّاعَةُ حَقٌّ، اللَّهُمَّ لَكَ أَسْلَمْتُ، وَبِكَ آمَنْتُ، وَعَلَيْكَ تَوَكَّلْتُ، وَإِلَيْكَ أَنَبْتُ، وَبِكَ خَاصَمْتُ، وَإِلَيْكَ حَاكَمْتُ، فَاغْفِرْ لِي مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ، وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ، أَنْتَ إِلَهِي، لَا إِلَهَ إِلَّا أَنْتَ

அல்லாஹும்ம லகல் ஹம்து, அன்த நூருஸ் ஸமாவாதி வல்அர்ள்(ض). வ லகல் ஹம்து, அன்த கய்யிமுஸ் ஸமாவாதி வல்அர்ள்(ض). வ லகல் ஹம்து, அன்த ரப்புஸ் ஸமாவாதி வல்அர்ளி(ض) வமன் பீ(ف)ஹின்ன.

அன்தல் ஹக்கு. வ வஃதுகல் ஹக்கு. வ கவ்லுகல் ஹக்கு. வ லிகாஉக ஹக்கு. வல்ஜன்னது ஹக்கு. வந்நாரு ஹக்கு, வந்நபிய்யூன ஹக்கு, வஸ்ஸாஅது ஹக்கு

அல்லாஹும்ம லக அஸ்லம்து, வ பிக ஆமன்து, வ அலைக தவக்கல்து, வ இலைக அனப்து, வ பிக கா(خ)ஸம்து, வ இலைக ஹாகம்து, பக்(غ)பிர்லி மா கத்தம்து வமா அக்(خ)கர்து வமா அஸ்ரர்து வ அஃலன்து. அன்த இலாஹி லா இலாஹ இல்லா அன்த.

இறைவா! உனக்கே புகழ் அனைத்தும். வானங்கள் மற்றும் பூமியின் ஒளி நீயே. உனக்கே புகழ் அனைத்தும். வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றை நிர்வகிப்பவன் நீயே. உனக்கே புகழ் அனைத்தும். வானங்கள், பூமி மற்றும் அவற்றில் உள்ளவற்றின் இறைவன் நீயே.

நீ உண்மையே. உன் வாக்குறுதி உண்மையே. உனது கூற்று உண்மையே. உன் சந்திப்பு உண்மை. சொர்க்கம் உண்மை. நபிமார்கள் உண்மை. நரகம் உண்மை. மறுமை நாள் உண்மை.

அல்லாஹ்வே! உனக்கே கட்டுப்பட்டேன். உன்மீதே நம்பிக்கை கொண்டுள்ளேன். உன்னையே சார்ந்துள்ளேன். உன்னிடமே திரும்புகிறேன். உன்னிடமே வழக்காடுவேன். உன்னிடமே நீதி கேட்பேன். எனவே, நான் முந்திச் செய்த, பிந்திச் செய்கிற, இரகசியமாகச் செய்த, பகிரங்கமாகச் செய்த பாவங்களை மன்னிப்பாயாக. நீயே என் இறைவன். உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை.

**அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 7499, முஸ்லிம் 1417**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# இரவுத் தொழுகையில் தக்பீர் கட்டியவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

7

اللَّهُمَّ رَبَّ جِبْرَائِيلَ وَمِيكَائِيلَ وَإِسْرَافِيلَ فَاطِرَ السَّمَوَاتِ وَالأَرْضِ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ أَنْتَ تَحْكُمُ بَيْنَ عِبَادِكَ فِيمَا كَانُوا فِيهِ يَخْتَلِفُونَ اهْدِنِي لِمَا اخْتُلِفَ فِيهِ مِنَ الْحَقِّ بِإِذْنِكَ إِنَّكَ تَهْدِي مَنْ تَشَاءُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ

அல்லாஹும்ம ரப்ப ஜிப்ராயீல வ மீக்காயீல வ இஸ்ராபீ(ف)ல, பா(ف)திரஸ் ஸமாவாதி வல்அர்ளி(ض), ஆலிமல் கை(غ)பி வஷ்(ش)ஷஹாததி, அந்த தஹ்குமு பைன இபாதிக பீ(ف)மா கானூ பீ(ف)ஹி யக்(خ)தலிபூ(ف)ன். இஹ்தினி லிமக்(خ)துலிப(ف) பீ(ف)ஹி மினல் ஹக்கி பி இத்னிக, இன்னக தஹ்தி மன் தஷா(ش)உ இலா ஸிராதிம் முஸ்தகீம்.

இறைவா! (வானவர்களாகிய) ஜிப்ராயீல், மீக்காயீல், இஸ்ராஃபீல் ஆகியோரின் அதிபதியே! வானங்கள் மற்றும் பூமியை முன்மாதிரியின்றிப் படைத்தவனே! மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்தவனே! நீ உன் அடியார்களிடையே அவர்கள் கொண்டிருந்த கருத்துவேறுபாடுகள் குறித்து (மறுமையில்) தீர்ப்பு வழங்குவாய். (பிற மக்களால்) மாற்றுக் கருத்து கொள்ளப்பட்டாலும் சத்திய (மார்க்க)த்திலேயே உன் தயவால் என்னை நிலைத்திருக்கச் செய்வாயாக! நீ நாடியவர்களை நேரான வழியில் நீயே செலுத்துகிறாய்.

**அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1418**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# ருகூவில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

1

## سُبُحَانَ رَبِّيَ الْعَظِيْمِ

சுப்ஹான ரப்பியல் அழீ(ظ)ம்

மகத்துவமிக்க எனது இரட்சகன் தூய்மையானவன்.

அறிவிப்பாளர் : ஹுதைஃபா(ரலி) அவர்கள், முஸ்லிம் 1421

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# ருகூவில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

2

اللَّهُمَّ لَكَ رَكَعْتُ وَبِكَ آمَنْتُ وَلَكَ أَسْلَمْتُ خَشَعَ لَكَ سَمْعِي وَبَصَرِي وَمُخِّي وَعَظْمِي وَعَصَبِي

அல்லாஹும்ம லக ரகஃது, வ பிக ஆமன்து, வ லக அஸ்லம்து. க(خ)ஷ(ش)அ லக சம்ஈ வ பஸ(ص)ரி வ முக்(خ)கி வஅழ்(ظ)மி வஅஸ(ص)பி

இறைவா, உனக்காகக் குனிந்தேன். உன்மீதே நம்பிக்கை கொண்டேன். உனக்கே கட்டுப்பட்டேன். உனக்கே என் செவியும் பார்வையும் மூளையும் எலும்பும் நரம்பும் பணிந்தன.

அறிவிப்பாளர்: அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1419

# ருகூவில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

3

اللَّهُمَّ لَكَ رَكَعْتُ وَبِكَ آمَنْتُ وَلَكَ أَسْلَمْتُ خَشَعَ لَكَ سَمْعِي وَبَصَرِي وَمُخِّي وَعَظْمِي وَعَصَبِي وَمَا اسْتَقَلَّتْ بِهِ قَدَمِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

அல்லாஹும்ம லக ரகஃது, வ பிக ஆமன்து, வ லக அஸ்லம்து. க(خ)ஷ(ش)அ லக சம்ஈ வ பஸ(ص)ரி வ முக்(خ)கி வஅழ்(ظ)மி வஅஸ(ص)பி வமஸ்தகல்லத் பிஹி கதமி லில்லாஹி ரப்பில் ஆலமீன்

இறைவா, உனக்காகக் குனிந்தேன். உன்மீதே நம்பிக்கை கொண்டேன். உனக்கே கட்டுப்பட்டேன். உனக்கே என் செவியும் பார்வையும் மூளையும் எலும்பும் நரம்பும் பணிந்தன. எனது பாதங்கள் சுமந்திருப்பவையும் அகிலங்களின் இரட்சகன் அல்லாஹ்வுக்காக பணிந்தன

அறிவிப்பாளர் : அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள், அஹமது 960

# ருகூவிலும், ஸுஜூதிலும் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

1

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

سُبْحَانَكَ اللَّهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ

اللَّهُمَّ اغْفِرْ لِي

சுப்ஹானகல்லாஹும்ம ரப்பனா வபிஹம்திக

அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லி

இறைவா! எங்கள் அதிபதியே! உன்னைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன். இறைவா! எனக்கு மன்னிப்பளிப்பாயாக!

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புகாரி 794

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# ருகூவிலும், ஸுஜூதிலும் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

2

سُبْحَانَكَ وَبِحَمْدِكَ أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ

சுப்ஹானக்க வபிஹம்திக அஸ்தக்(غ)பி(ف)ருக வஅதூபு இலைக

இறைவா! உன்னைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்.
உன்னிடத்தில் பாவமன்னிப்புக்கோரி உன்னிடமே மீளுகிறேன்

سُبْحَانَكَ رَبِّي وَبِحَمْدِكَ اللَّهُمَّ اغْفِرْ لِي

சுப்ஹானக்க ரப்பி வபிஹம்திக அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லி

என் அதிபதியே! உனைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்.
இறைவா! எனக்கு மன்னிப்பளிப்பாயாக!

سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ أَسْتَغْفِرُ اللَّهَ وَأَتُوبُ إِلَيْهِ

சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி அஸ்தக்(غ)பி(ف)ருல்லாஹ
வ அதூபு இலைஹி

லாஹ் மிகத் தூயவன் எனப் புகழ்ந்தவனாய் அவனைத் துதிக்கிறேன்.
அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி மீளுகிறேன்

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 835,836,837

# ருகூவிலும், ஸுஜூதிலும் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

3

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ لَا إِلَهَ إِلَّا أَنْتَ

சுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக
லா இலாஹ இல்லா அன்த

இறைவா! உன்னைப் போற்றிப் புகழ்ந்து
துதிக்கிறேன். உன்னைத் தவிர
வணக்கத்திற்குரிய வேறு நாயன் இல்லை.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், நஸாயி 1131

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# ருகூவிலும், ஸுஜூதிலும் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

4

سُبْحَانَ ذِى الْجَبَرُوتِ وَالْمَلَكُوتِ
وَالْكِبْرِيَاءِ وَالْعَظَمَةِ

சுப்ஹானதில் ஜபருதி வல் மலகூத்தி
வல்கிப்ரியாஇ அழ(ظ)மஹ்

அடக்கியாள்பவனும், ஆட்சியாளனும்,
கண்ணியமும், மகத்துவமுமிக்கவன்
மிக்க தூயவன்

அறிவிப்பாளர்: அவ்ஃப் இப்னு மாலிக் அல் அஷ்ஜாயி(ரலி) அவர்கள்
அபூதாவூத் 873

# ருகூவிலும், ஸுஜூதிலும் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

5

سُبُّوحٌ قُدُّوسٌ رَبُّ الْمَلَائِكَةِ وَالرُّوحِ

## சுப்புஹூன் குத்தூஸூன் ரப்புல் மலாயிகத்தி வர்ரூஹ்

வானவர்களின், ஜிப்ரீலின் இரட்சகன் மிக்க தூயவன், பரிசுத்தமானவன்

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 840

# ருகூவிலிருந்து எழுந்தவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

1

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ

**அல்லாஹும்ம ரப்பனா லகல் ஹம்து**

இறைவா! எங்கள் இரட்சகனே! உனக்கே புகழ் அனைத்தும்

اللَّهُمَّ رَبَّنَا وَلَكَ الْحَمْدُ

**அல்லாஹும்ம ரப்பனா வலகல் ஹம்து**

இறைவா! எங்கள் இரட்சகனே! இன்னும் உனக்கே புகழ் அனைத்தும்

رَبَّنَا لَكَ الْحَمْدُ

**ரப்பனா லகல் ஹம்து**

எங்கள் இரட்சகனே! உனக்கே புகழ் அனைத்தும்

رَبَّنَا وَلَكَ الْحَمْدُ

**ரப்பனா வலகல் ஹம்து**

எங்கள் இரட்சகனே! இன்னும் உனக்கே புகழ் அனைத்தும்

அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி) அவர்கள்
புகாரி 796,795,722,804

# ருகூவிலிருந்து எழுந்தவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

2

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

رَبَّنَا وَلَكَ الْحَمْدُ، حَمْدًا كَثِيرًا طَيِّبًا مُبَارَكًا فِيهِ

ரப்பனா வ லகல் ஹம்து ஹம்தன் கஸீ(ث)ரன் த(ط)ய்யிபன் முபாரகன் பீ(ف)ஹி

எங்கள் இரட்சகனே! மேலும் புகழனைத்தும் உனக்கே அருட்பேறும் அழகுமிக்க அதிகமான புகழ் உனக்கே.

அறிவிப்பாளர்: ரிஃபாஆ இப்னு ராஃபிவு(ரலி) அவர்கள், புகாரி 799

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# ருகூவிலிருந்து எழுந்தவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

3

اللَّهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَوَاتِ وَمِلْءَ الْأَرْضِ وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ

அல்லாஹும்ம ரப்பனா லகல் ஹம்து மில்அஸ் ஸமாவாதி(ت) வ மில்அல்அர்ளி(ض) வ மில்அ மா ஷி(ش)ஃத(ت) மின் ஷை(ش)யின் பஃது

இறைவா! வானங்கள் நிரம்ப, பூமி நிரம்ப, இதன் பின்னர் நீ நாடியவை நிரம்பப் புகழ் அனைத்தும் உனக்கே உரியது

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் அபீஅவ்ஃபா (ரலி) அவர்கள், முஸ்லிம் 819

# ருகூவிலிருந்து எழுந்தவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

4

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَوَاتِ وَمِلْءَ الأَرْضِ وَمِلْءَ مَا بَيْنَهُمَا وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ

அல்லாஹும்ம ரப்பனா லகல் ஹம்து மில்அஸ் ஸமாவாதி(ت) வ மில்அல்அர்ளி(ض) வ மில்அ மா பைனஹுமா வமில்அ மா ஷி(ش)ஃத(ت) மின் ஷை(ش)யின் பஃது

இறைவா! வானங்கள் நிரம்ப, பூமி நிரம்ப, அவற்றுக்கிடையே இருப்பவை நிரம்ப, இதன் பின்னர் நீ நாடியவை நிரம்பப் புகழ் அனைத்தும் உனக்கே உரியது

அறிவிப்பாளர் : அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1419

# ருகூவிலிருந்து எழுந்தவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

5

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَاءِ وَمِلْءَ الْأَرْضِ

وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ

اللَّهُمَّ طَهِّرْنِي بِالثَّلْجِ وَالْبَرَدِ وَالْمَاءِ الْبَارِدِ

اللَّهُمَّ طَهِّرْنِي مِنَ الذُّنُوبِ وَالْخَطَايَا كَمَا يُنَقَّى

الثَّوْبُ الْأَبْيَضُ مِنَ الْوَسَخِ

அல்லாஹும்ம லகல் ஹம்து மில்அஸ் ஸமாவாதி(ت)

வ மில்அல்அர்ளி(ض) வமில்அ மா ஷி(ش)ஃத(ت) மின் ஷை(ش)யின் பஃது

அல்லாஹும்ம த(ط)ஹ்ஹிர்னி பிஸ்(ث)ஸல்ஜி வல்பரதி வல்மாயில் பாரித்.

அல்லாஹும்ம த(ط)ஹ்ஹிர்னி மினத் துனூபி வல்க(خ)தா(ط)யா

கமா யுனக்கஸ் ஸ(ث)வ்புல் அப்யளு(ض) மினல் வஸகி(خ)

இறைவா! வானங்கள் நிரம்ப, பூமி நிரம்ப, அவற்றுக்குப் பின் நீ நாடிய இன்ன பிற பொருள்கள் நிரம்பப் புகழ் அனைத்தும் உனக்கே உரியது.

இறைவா,பனிக்கட்டியாலும்ஆலங்கட்டியாலும் குளிர்ந்த நீராலும் என்னைத் தூய்மைப்படுத்துவாயாக!

இறைவா, அழுக்கிலிருந்து வெண்மையான ஆடை தூய்மைப்படுத்தப்படுவதைப் போன்று பாவங்களிலிருந்தும் தவறுகளிலிருந்தும் என்னைத் தூய்மைப்படுத்துவாயாக!

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அபீஅவ்ஃபா (ரலி) அவர்கள், முஸ்லிம் 821

# ருகூவிலிருந்து எழுந்தவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

6

رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَوَاتِ وَالْأَرْضِ وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ
أَهْلَ الثَّنَاءِ وَالْمَجْدِ أَحَقُّ مَا قَالَ الْعَبْدُ وَكُلُّنَا لَكَ عَبْدٌ اللَّهُمَّ لَا مَانِعَ
لِمَا أَعْطَيْتَ وَلَا مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلَا يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجَدُّ

ரப்பனா லகல் ஹம்து மில்அஸ் ஸமாவாதி(ت)
வல்அர்ளி(ض), வ மில்அ மா ஷி(ش)ஃத(ت) மின் ஷை(ش)யின்
பஃது அஹ்லஸ்(ث)ஸனாயி வல்மஜ்த். அஹக்கு மா காலல் அப்து,
வ குல்லுனா லக அப்துன். அல்லாஹும்ம, லா மானிஅ லிமா அஃதை(ط)த(ت),
வலா முஃதி(ط)ய லிமா மனஃத(ت), வலா யன்பஉ தல்ஜத்தி மின்கல் ஜத்

எங்கள் அதிபதியே! வானங்களும் பூமியும் நிரம்பும் அளவுக்கு, நீ நாடும் இன்ன பிற பொருள்கள் யாவும் நிரம்பும் அளவுக்குப் புகழனைத்தும் உனக்கே உரியது. புகழுக்கும் மாண்புக்கும் உரியவனே! நாங்கள் அனைவரும் உன் அடிமைகள்தாம். அடியார்கள் கூறும் சொற்களிலேயே மிகவும் தகுதி வாய்ந்தது, இறைவா! நீ கொடுத்ததைத் தடுப்பவர் யாருமிலர். நீ தடுத்ததைக் கொடுப்பவர் யாருமிலர். எந்தச் செல்வரின் செல்வமும் அவருக்கு உ(ந்தன் வேதனை த)ன்னிலிருந்து பயன் அளிக்காது

அறிவிப்பாளர் : அபூசயீத் அல்குத்ரீ(ரலி) அவர்கள், முஸ்லிம் 822

# ருகூவிலிருந்து எழுந்தவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

7

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَوَاتِ وَمِلْءَ الْأَرْضِ وَمَا بَيْنَهُمَا وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ أَهْلَ الثَّنَاءِ وَالْمَجْدِ لَا مَانِعَ لِمَا أَعْطَيْتَ وَلَا مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلَا يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجَدُّ

அல்லாஹும்ம ரப்பனா லகல் ஹம்து மில்அஸ் ஸமாவாதி(ت) வமில்அல்அர்ளி(ض), வமா பைனஹுமா, வ மில்அ மா ஷி(ش)ஃத(ت) மின் ஷை(ش)யின் பஃது அஹ்லஸ்(ث)ஸனாயி வல்மஜ்த். லா மானிஅ லிமா அஃதை(ط)த(ت), வலா முஃதி(ط)ய லிமா மனஃத(ت), வலா யன்ப(ف)உ தல்ஜத்தி மின்கல் ஜத்

இறைவா ! எங்கள் அதிபதியே! வானங்கள் நிரம்ப, பூமி நிரம்ப, இன்னும் அவைகளுக்கு இடையே உள்ளவை நிரம்ப மற்றும் நீ நாடிய இன்ன பிற பொருள்கள் நிரம்பப் புகழனைத்தும் உனக்கே உரியது. புகழுக்கும் மாண்புக்கும் உரியவனே! நீ கொடுத்ததைத் தடுப்பவர் யாருமிலர். நீ தடுத்ததைக் கொடுப்பவர் யாருமிலர். எந்தச் செல்வரின் செல்வமும் அவருக்கு உந்தன் வேதனை த)ன்னிலிருந்து பயன் அளிக்காது.

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 823

# ருகூவிலிருந்து எழுந்தவுடன் ஓத வேண்டிய துஆக்கள்

8

جمعية الـدعوة والإرشـاد وتوعية الجاليـات بالخبـر

اللَّهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَوَاتِ وَمِلْءَ الأَرْضِ وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ أَهْلَ الثَّنَاءِ وَالْمَجْدِ لاَ مَانِعَ لِمَا أَعْطَيْتَ وَلاَ مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلاَ يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجَدُّ

அல்லாஹும்ம ரப்பனா லகல் ஹம்து மில்அஸ் ஸமாவாதி(ت) வமில்அல்அர்ளி(ض), வ மில்அ மா ஷி(ش)ஃதத(ت) மின் ஷை(ش)யின் பஃது அஹ்லஸ்(ث)ஸனாயி வல்மஜ்த். லா மானிஅ லிமா அஃதை(ط)த(ت), வலா முஃதி(ط)ய லிமா மனஃத(ت), வலா யன்ப(ف)உ தல்ஜத்தி மின்கல் ஜத்

இறைவா! எங்கள் அதிபதியே! வானங்கள் நிரம்ப, பூமி நிரம்ப, நீ நாடும் இன்ன பிற பொருட்கள் யாவும் நிரம்பப் புகழனைத்தும் உனக்கே உரியது. புகழுக்கும் மாண்புக்கும் உரியவனே! நீ கொடுத்ததைத் தடுப்பவர் யாருமிலர். நீ தடுத்ததைக் கொடுப்பவர் யாருமிலர். எந்தச் செல்வரின் செல்வமும் அவருக்கு உந்தன் வேதனை த)ன்னிலிருந்து பயன் அளிக்காது.

அறிவிப்பாளர் : பராஃ இப்னு ஆஸிப்(ரலி) அவர்கள், முஸ்லிம் 811

# ஸுஜூதில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

1

سُبُحَانَ رَبِّيَ الأَعْلَى

சுப்ஹான ரப்பியல் அஃலா

உயர்வுமிக்க எனது இரட்சகன் தூய்மையானவன்

அறிவிப்பாளர் : ஹூதைஃபா(ரலி) அவர்கள், முஸ்லிம் 1421

# ஸுஜூதில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

2

اللَّهُمَّ لَكَ سَجَدْتُ وَبِكَ آمَنْتُ وَلَكَ أَسْلَمْتُ سَجَدَ وَجْهِي لِلَّذِي خَلَقَهُ وَصَوَّرَهُ وَشَقَّ سَمْعَهُ وَبَصَرَهُ تَبَارَكَ اللَّهُ أَحْسَنُ الْخَالِقِينَ

அல்லாஹும்ம லக ஸஜத்(د)து(ت) வ பிக ஆமன்து வலக அஸ்லம்து ஸஜத(د) வஜ்ஹி லில்லதி க(خ)லகஹு வ ஸ(ص)வ்வரஹு, வ ஷ(ش)க்க ஸம்அஹு வ பஸ(ص)ரஹு. தபாரக்கல்லாஹு அஹ்ஸனுல் கா(خ)லிகீன்

இறைவா! உனக்கே சிரம்பணிந்தேன். உன்மீதே நம்பிக்கை கொண்டேன். உனக்கே கட்டுப்பட்டேன். என் முகத்தைப் படைத்து வடிவமைத்து அதில் காதையும் கண்ணையும் திறந்துவைத்த (இறை)வனுக்கு முன் என் முகம் பணிந்தது. படைப்பாளர்களில் மிக மேலானவனான அல்லாஹ் சுபிட்சம் மிக்கவன்

அறிவிப்பாளர் : அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1419

# ஸுஜூதில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

3

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ اغْفِرْ لِي ذَنْبِي كُلَّهُ دِقَّهُ وَجِلَّهُ وَأَوَّلَهُ وَآخِرَهُ
وَعَلَانِيَتَهُ وَسِرَّهُ

**அல்லாஹும் மக்(ஃ)பிர்லி தன்பி குல்லஹு, திக்கஹு வ ஜில்லஹு, வ அவ்வலஹு வ ஆகி(ஃ)ரஹு, வ அலானியதஹு வ ஸிர்ரஹு**

இறைவா! என் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! அவற்றில் சிறியதையும் பெரியதையும்,ஆரம்பமாகச் செய்ததையும் இறுதியாகச் செய்ததையும், வெளிப்படையாகச் செய்ததையும் மறைமுகமாகச் செய்ததையும் மன்னிப்பாயாக.

**அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி) அவர்கள், முஸ்லிம் 833**

# ஸுஜூதில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

4

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ أَعُوذُ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ
وَبِمُعَافَاتِكَ مِنْ عُقُوبَتِكَ وَأَعُوذُ بِكَ مِنْكَ
لَا أُحْصِي ثَنَاءً عَلَيْكَ أَنْتَ كَمَا أَثْنَيْتَ عَلَى نَفْسِكَ

அல்லாஹும்ம அஊது(ذ) பி ரிளா(ض)க மின் சக(خ)தி(ط)க, வபி முஆபா(ف)திக மின் உகூபதிக, வ அஊது(ذ) பிக மின்க, லா உஹ்ஸி(ص) ஸ(ث)னாஅன் அலைக அன்த கமா அஸ்(ث)னைத அலா நப்(ف)ஸிக

யா அல்லாஹ் ! உனது திருப் பொருத்தத்தைக் கொண்டு உனது கோபத்தை விட்டும், உனது மன்னிப்பைக் கொண்டு உனது தண்டனையை விட்டும், உன்னைக் கொண்டு நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீயே உன்னைப் புகழ்ந்தது போன்று உன்னை முழுமையாகப் புகழ என்னால் முடியாது (அதற்கு நான் சக்தி பெற மாட்டேன்).

அறிவிப்பாளர் :ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 839

# நடு இருப்பில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

1

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

رَبِّ اغْفِرْ لِي، رَبِّ اغْفِرْ لِي

ரப்பிக்( غ )பி(ف)ர்லீ
ரப்பிக்( غ )பி(ف)ர்லீ

எனது இறைவனே! என்னை மன்னிப்பாயாக! எனது இறைவனே! என்னை மன்னிப்பாயாக!

இப்னுமாஜா 798

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# நடு இருப்பில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

2

اللَّهُمَّ اغْفِرْ لِي وَارْحَمْنِي وَاجْبُرْنِي وَاهْدِنِي وَارْزُقْنِي

**அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லீ வர்ஹம்னீ வஜ்புர்னீ வஹ்தினீ வர்ஸு(ز)க்னீ**

யா அல்லாஹ்! என்னை மன்னிப்பாயாக! எனக்கு அருள் புரிவாயாக! எனக்கு ஆறுதல் அளித்திடுவாயாக! எனக்கு நேர்வழி காட்டுவாயாக! எனக்கு ரிஸ்கை வழங்குவாயாக!

திர்மிதி 284

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# நடு இருப்பில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

3

اللَّهُمَّ اغْفِرْ لِي وَارْحَمْنِي
وَعَافِنِي وَاهْدِنِي وَارْزُقْنِي

**அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லீ வர்ஹம்னீ**
**வஆபி(ف)னீ வஹ்தினீ வர்ஸு(ز)க்னீ**

யா அல்லாஹ்! என்னை மன்னிப்பாயாக! எனக்கு அருள் புரிவாயாக! எனக்கு ஆரோக்கியத்தை அளித்திடுவாயாக! எனக்கு நேர்வழி காட்டுவாயாக! எனக்கு ரிஸ்கை வழங்குவாயாக!

அபுதாவூத் 850

# நடு இருப்பில் ஓத வேண்டிய திக்ருகள், துஆக்கள்

4

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

رَبِّ اغْفِرْ لِي وَارْحَمْنِي وَاجْبُرْنِي وَارْزُقْنِي وَارْفَعْنِي

ரப்பிக்(غ)பி(ف)ர்லீ வர்ஹம்னீ வஜ்புர்னீ வர்ஸு(ز)க்னீ வர்ப(ف)ஃனீ

என் இறைவனே! என்னை மன்னிப்பாயாக! எனக்கு அருள் புரிவாயாக! எனக்கு ஆறுதல் அளித்திடுவாயாக! எனக்கு ரிஸ்கை வழங்குவாயாக! என்னை உயர்த்திடுவாயாக!

இப்னுமாஜா 898

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

1

# தொழுகையின் இருப்பில் ஓத வேண்டிய அத்தஹிய்யாத் (தஷஹ்ஹுத்)

التَّحِيَّاتُ لِلَّهِ، وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ، السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللَّهِ وَبَرَكَاتُهُ، السَّلَامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللَّهِ الصَّالِحِينَ. أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

அத்த(ت)ஹிய்யாது(ت) லில்லாஹி வஸ்(ص)ஸலவாது(ت) வத்தைய்யிபாது(ت) அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் நபிய்யு வரஹ்மது(ت)ல்லாஹி வபரகாது(ت)ஹு, அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸா(ص)லிஹீன், அஷ்(ش)ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்(ش)ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு

காணிக்கைகளும் வணக்கங்களும் பாராட்டுக்களும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே உங்களின் மீது ஸலாமும் அல்லாஹ்வின் ரஹ்மத்தும் பரகத்தும் ஏற்படட்டுமாக! எங்களின் மீது அல்லாஹ்வின் நல்லடியார்கள் அனைவர் மீதும் ஸலாம் உண்டாகட்டும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று உறுதியாக நம்புகிறேன். மேலும், முஹம்மத்(ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாக இருக்கிறார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அவர்கள், புகாரி 831

# தொழுகையின் இருப்பில் ஓத வேண்டிய அத்தஹிய்யாத் (தஷஹ்ஹுத்)

2

"التَّحِيَّاتُ الْمُبَارَكَاتُ الصَّلَوَاتُ الطَّيِّبَاتُ لِلَّهِ السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللَّهِ وَبَرَكَاتُهُ السَّلَامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللَّهِ الصَّالِحِينَ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ"

அத்த(ت)ஹிய்யாது(ت)ல் முபாரக்காத்துஸ்(ص)ஸலவாது(ت)த்தைய்யிபாது(ت) லில்லாஹி அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் நபிய்யு வரஹ்மது(ت)ல்லாஹி வபரகாது(ت)ஹு, அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸா(ص)லிஹீன், அஷ்(ش)ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்(ش)ஹது அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹ்

சொல், செயல், பொருள் சார்ந்த எல்லாக் காணிக்கைகளும் சுபிட்சங்களும் வணக்கங்களும் பாராட்டுகளும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே! உங்கள் மீது சாந்தியும் அல்லாஹ்வின் அருளும் சுபிட்சமும் உண்டாகட்டுமாக! எங்கள்மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாகட்டும்! அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்று நான் உறுதிமொழிகிறேன். மேலும் முஹம்மத் (ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதிமொழிகிறேன்.

## சிறப்பு

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் குர்ஆனின் அத்தியாயம் ஒன்றைக் கற்றுத் தருவதைப் போன்று அத்தஹிய்யாத்தை எங்களுக்கு கற்றுத்தந்தார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 677

# தொழுகையின் இருப்பில் ஓத வேண்டிய அத்தஹிய்யாத் (தஷஹ்ஹுத்)

3

التَّحِيَّاتُ الطَّيِّبَاتُ الصَّلَوَاتُ لِلَّهِ السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللَّهِ وَبَرَكَاتُهُ السَّلَامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللَّهِ الصَّالِحِينَ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

அத்த(ت)ஹிய்யாது(ت) த்(ط)தைய்யிபாது(ت)ஸ்(ص)ஸலவாது(ت) லில்லாஹி அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் நபிய்யூ வரஹ்மது(ت)ல்லாஹி வபரகாது(ت)ஹு, அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸா(ص)லிஹீன், அஷ்(ش)ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்(ش)ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு

சொல், செயல், பொருள் சார்ந்த எல்லாக் காணிக்கைகளும் பாராட்டுகளும் வணக்கங்களும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே! உங்கள்மீது சாந்தியும் அல்லாஹ்வின் அருளும் சுபிட்சமும் உண்டாகட்டுமாக! எங்கள்மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாகட்டும்! அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்று நான் உறுதிமொழிகிறேன். மேலும் முஹம்மத் (ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார்கள் என்றும் உறுதிமொழிகிறேன்.

**அறிவிப்பாளர்: அபூ மூஸா (ரலி) அவர்கள், முஸ்லிம் 679**

# தொழுகையின் இருப்பில் ஓத வேண்டிய அத்தஹிய்யாத் (தஷஹ்ஹுத்)

4

التَّحِيَّاتُ الطَّيِّبَاتُ الصَّلَوَاتُ الزَّاكِيَاتُ لِلَّهِ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ
وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُ اللَّهِ وَرَسُولُهُ السَّلَامُ
عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللَّهِ وَبَرَكَاتُهُ السَّلَامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللَّهِ
الصَّالِحِينَ السَّلَامُ عَلَيْكُمْ.

அத்த(ت)ஹிய்யாது(ت) த்(ط)தைய்யிபாது(ت)ஸ்(ص)ஸலவாது(ت) ஸ்(ز) ஸாகியாது(ت) லில்லாஹி அஷ்(ش)ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு வஅஷ்(ش)ஹது அன்ன முஹம்மதன் அப்துல்லாஹி வரஸூலுஹு அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் நபிய்யு வரஹ்மது(ت)ல்லாஹி வபரகாது(ت)ஹு, அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸா(ص)லிஹீன அஸ்ஸலாமு அலைக்கும்.

சொல், செயல், பொருள் சார்ந்த எல்லாக் காணிக்கைகளும் பாராட்டுகளும் வணக்கங்களும் புகழ்ச்சியும் அல்லாஹ்வுக்கே உரியன. வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் ஏகன், அவனுக்கு இணை இல்லை எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார்கள் என்றும் உறுதிமொழிகிறேன். நபியே! உங்கள்மீது சாந்தியும் அல்லாஹ்வின் அருளும் சுபிட்சமும் உண்டாகட்டுமாக! எங்களின் மீது அல்லாஹ்வின் நல்லடியார்கள் அனைவர் மீதும் ஸலாம் உண்டாகட்டுமாக! உங்கள் மீதும் ஸலாம் உண்டாகட்டுமாக!

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், முவத்தா மாலிக் 206

# தொழுகையின் இருப்பில் ஓத வேண்டிய அத்தஹிய்யாத் (தஷஹ்ஹுத்)

5

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

التَّحِيَّاتُ لِلَّهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللَّهِ وَبَرَكَاتُهُ السَّلَامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللَّهِ الصَّالِحِينَ ، أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

அத்த(ت)ஹிய்யாது(ت) லில்லாஹி வஸ்(ص)ஸலவாது(ت) வத்தை(ط)ய்யிபாது(ت) அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் நபிய்யூ வரஹ்மது(ت)ல்லாஹி வபரகாது(ت)ஹு, அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸா(ص)லிஹீன், அஷ்(ش)ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீகலஹு வஅஷ்(ش)ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு

காணிக்கைகளும் வணக்கங்களும் பாராட்டுக்களும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே! உங்களின் மீது ஸலாமும் அல்லாஹ்வின் ரஹ்மத்தும் பரக்கத்தும் ஏற்படட்டுமாக! எங்களின் மீது அல்லாஹ்வின் நல்லடியார்கள் அனைவர் மீதும் ஸலாம் உண்டாகட்டும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை, அவன் ஏகன், அவனுக்கு இணை இல்லை என்று உறுதியாக நம்புகிறேன். மேலும், முஹம்மத்(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாக இருக்கிறார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அவர்கள், அபூதாவூத் 971

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# தொழுகையின் இருப்பில் ஓத வேண்டிய அத்தஹிய்யாத் (தஷஹ்ஹுத்)

6

التَّحِيَّاتُ لِلَّهِ الزَّاكِيَاتُ لِلَّهِ الطَّيِّبَاتُ الصَّلَوَاتُ لِلَّهِ السَّلَامُ عَلَيْكَ
أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللَّهِ وَبَرَكَاتُهُ السَّلَامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللَّهِ
الصَّالِحِينَ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

**அத்த(ت)ஹிய்யாது(ت) லில்லாஹிஸ்(ز)ஸாகியாது(ت) லில்லாஹித் (ط)தைய்யிபாது(ت)ஸ்(ص)ஸலவாது(ت) லில்லாஹி அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் நபிய்யு வரஹ்மது(ت)ல்லாஹி வபரகாது(ت)ஹு, அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸா(ص)லிஹீன், அஷ்(ش)ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்(ش)ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு**

காணிக்கைகள் அல்லாஹ்வுக்கே உரியன. புகழ்ச்சிகள் அல்லாஹ்வுக்கே உரியன. பாராட்டுக்களும் அல்லாஹ்வுக்கே உரியன. வணக்கங்களும் அல்லாஹ்வுக்கே உரியன.நபியே உங்களின் மீது ஸலாமும் அல்லாஹ்வின் ரஹ்மத்தும் பரகத்தும் ஏற்படட்டுமாக! எங்களின் மீது அல்லாஹ்வின் நல்லடியார்கள் அனைவர் மீதும் ஸலாம் உண்டாகட்டும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று உறுதியாக நம்புகிறேன். மேலும், முஹம்மத்(ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாக இருக்கிறார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

**அறிவிப்பாளர்: உமர்(ரலி) அவர்கள், முவத்தா மாலிக் 204**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# தொழுகையின் இறுதி இருப்பின் ஸலவாத்து 1

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ
إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ، اللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا
بَارَكْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத். அல்லாஹீம்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம,வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத்

இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களின் மீது நீ கருணை புரிந்ததைப் போல் முஹம்மத் (ﷺ) மீதும் முஹம்மத் (ﷺ) குடும்பத்தார் மீதும் கருணை புரிந்திடு. நீயே புகழுக்குரியவனும், கண்ணியம் மிக்கவனும் ஆவாய். இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களின் மீதும் இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ உன் அருள் வளத்தைப் பொழிந்ததைப் போல் முஹம்மத் (ﷺ) மீதும், முஹம்மத் (ﷺ) குடும்பத்தார் மீதும் உன் அருள் வளத்தைப் பொழிந்திடு, நீயே புகழுக்குரியவனும், கண்ணியம் மிக்கவனும் ஆவாய்.

அறிவிப்பாளர்: கஅப் இப்னுஉஜ்ரா(ரலி) அவர்கள், புகாரி 3370

# தொழுகையின் இறுதி இருப்பின் ஸலவாத்து

2

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا صَلَّيْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ، اللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا بَارَكْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின், கமா ஸல்லய்த்த அலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத். அல்லாஹும்ம, பாரிக் அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின், கமா பாரக்த அலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்

இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தாருக்கு நீ கருணை புரிந்ததைப் போன்று முஹம்மத் (ﷺ) அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் நீ கருணை புரிவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியனும் பெருமைக்குரியவனுமாவாய். இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தாருக்கு நீ சுபிட்சம் வழங்கியதைப் போன்று முஹம்மத் (ﷺ) அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் நீ சுபிட்சம் வழங்குவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் பெருமைக்குரியவனுமாவாய்.

அறிவிப்பாளர் : கஅப் பின் உஜ்ரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 683

هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# தொழுகையின் இறுதி இருப்பின் ஸலவாத்து

3

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا صَلَّيْتَ عَلَى آلِ
إِبْرَاهِيمَ، وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ، كَمَا بَارَكْتَ
عَلَى آلِ إِبْرَاهِيمَ، فِي الْعَالَمِينَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா ஆலி இப்ராஹீம வ பாரிக் அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா ஆலி இப்றாஹீம ஃபில் ஆலமீன இன்னக்க ஹமீதும் மஜீத்.

இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தாருக்கு நீ கருணை புரிந்ததைப் போன்று முஹம்மத் (ﷺ) அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் நீ கருணை புரிவாயாக! அகிலத்தாரில் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தாருக்கு நீ சுபிட்சம் அளித்ததைப் போன்று முஹம்மத் (ﷺ) அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் நீ சுபிட்சமளிப்பாயாக! நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் பெருமைக்குரியவனுமாவாய்.

அறிவிப்பாளர்: அபூமஸ்ஊத் அல்அன்சாரி (ரலி) அவர்கள், முஸ்லிம் 682

# தொழுகையின் இறுதி இருப்பின் ஸலவாத்து

4

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ، وَأَزْوَاجِهِ، وَذُرِّيَّتِهِ، كَمَا صَلَّيْتَ

عَلَى آلِ إِبْرَاهِيمَ، وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ، وَأَزْوَاجِهِ، وَذُرِّيَّتِهِ،

كَمَا بَارَكْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அஸ்வாஜிஹி,
வ துர்ரியத்திஹி, கமா ஸல்லைத அலா ஆலி இப்ராஹீம,
வ பாரிக் அலா முஹம்மதின் வ அஸ்வாஜிஹி வ துர்ரியத்திஹி,
கமா பாரக்த அலா ஆலி இப்ராஹீம, இன்னக்க ஹமீதும் மஜீத்

இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தாருக்கு நீ கருணை புரிந்ததைப் போன்று முஹம்மத்(ஸல்) அவர்களுக்கும், அவர்களுடைய துணைவியர் மற்றும் சந்ததியினருக்கும் நீ கருணை புரிவாயாக! இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தாருக்கு நீ சுபிட்சம் வழங்கியதைப் போன்று முஹம்மத்(ﷺ) அவர்களுக்கும், அவர்களுடைய துணைவியர் மற்றும் சந்ததியினருக்கும் நீ சுபிட்சம் வழங்குவாயாக! நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் பெருமைக்குரியவனுமாவாய்

அறிவிப்பாளர்: அபூஹுமைத் அஸ்ஸாஇதீ (ரலி) அவர்கள், முஸ்லிம் 686

# தொழுகையின் இறுதி இருப்பின் ஸலவாத்து

5

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ عَبْدِكَ وَرَسُولِكَ، كَمَا صَلَّيْتَ
عَلَى آلِ إِبْرَاهِيمَ، وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ، وَعَلَى آلِ مُحَمَّدٍ،
كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيمَ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் அப்திக
வ ரஸூலிக கமா ஸல்லைத அலா ஆலி இப்ராஹீம
வ பாரிக் அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின்
கமா பாரக்த அலா இப்ராஹீம

இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தாருக்கு நீ கருணை புரிந்ததைப் போன்று உனது அடியாரும் தூதருமாகிய முஹம்மத் (ﷺ) அவர்கள் மீது கருணை புரிவாயாக. இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு நீ சுபிட்சம் வழங்கியதைப் போன்று முஹம்மத் (ﷺ) அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் நீ சுபிட்சம் வழங்குவாயாக!

அறிவிப்பாளர்: அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அவர்கள், புகாரி 4798

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

# தொழுகையின் இறுதி இருப்பின் ஸலவாத்து

6

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ، وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ فِي الْعَالَمِينَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத். அல்லாஹீம்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம,வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத்

’இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களின் மீதும் அவர்களது குடும்பத்தார் மீதும் நீ கருணை புரிந்ததைப் போல் முஹம்மத் (ﷺ) மீதும் முஹம்மத் (ﷺ) குடும்பத்தார் மீதும் கருணை புரிந்திடு. அகிலத்தாரில் இப்ராஹீம் (அலை) அவர்களின் மீதும் இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ உன் அருள் வளத்தைப் பொழிந்தைப் போல் முஹம்மத் (ﷺ) மீதும், முஹம்மத் (ﷺ) குடும்பத்தார் மீதும் உன் அருள் வளத்தைப் பொழிந்திடு, நீயே புகழுக்குரியவனும், கண்ணியம் மிக்கவனும் ஆவாய்.

அறிவிப்பாளர் : அபுமஸ்வூத் அல் அன்ஸாரி (ரலி) அவர்கள், திர்மிதி 3220

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

1

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ جَهَنَّمَ اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ شَرِّ الْمَسِيحِ الدَّجَّالِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மின் அதாபி ஜஹன்னம, அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மின் அதாபில் கப்ரி, அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மின் ஃபித்னதில் மஹ்யா வல் மமாத்தி, அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மின் ஷர்ரில் மஸீஹித் தஜ்ஜால்.

இறைவா ! உன்னிடம் நான் நரகத்தின் வேதனையிலிருந்தும், இறைவா ! உன்னிடம் நான் கப்ரின் வேதனையிலிருந்தும், இறைவா ! உன்னிடம் நான் வாழ்வின் சோதனையிலிருந்தும் இறப்பின் சோதனையிலிருந்தும், இறைவா ! உன்னிடம் நான் (பெருங்குழப்பவாதியான) மஸீஹுத் தஜ்ஜாலால் ஏற்படும் குழப்பத்தின் தீங்கிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) அவர்கள், முஸ்லிம் 1354

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

2

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَأَعُوذُ بِكَ مِنْ
فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا
وَفِتْنَةِ الْمَمَاتِ اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْمَأْثَمِ وَالْمَغْرَمِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மின் அதாபில் கப்ரி, வ அஊது பிக மின் ஃபித்னதில் மஸீஹித் தஜ்ஜால். வ அஊது பிக மின் ஃபித்னதில் மஹ்யா வ ஃபித்னதில் மமாத்தி அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் மஃஸமி வல் மக்ரமி

’இறைவா! கப்ருடைய வேதனையைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். தஜ்ஜாலின் குழப்பத்தைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். வாழும் போதும் மரணிக்கும் போதும் ஏற்படும் குழப்பத்தைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். பாவங்களைவிட்டும் கடனைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்’

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், புகாரி 832

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

3

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ إِنِّي ظَلَمْتُ نَفْسِي ظُلْمًا كَثِيرًا ، وَلَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ فَاغْفِرْ لِي مَغْفِرَةً مِنْ عِنْدِكَ وَارْحَمْنِي إِنَّكَ أَنْتَ الْغَفُورُ الرَّحِيمُ

அல்லாஹும்ம இன்னீ ழ(ظ)லம்து நப்(ف)ஸீ ழு(ظ)ல்மன் கஸீ(ث)ரன். வலா யக்(غ)பி(ف)ருத் துனூப இல்லா அந்த. ப(ف)க்(غ)பி(ف)ர்லீ மக்(غ)பி(ف)ரதம் மின் இன்திக வர்ஹம்னீ. இன்னக அன்தல் க(غ)பூ(ف)ருர் ரஹீம்

'இறைவா! எனக்கு நான் பெருமளவு அநீதி இழைத்து விட்டேன். உன்னைத் தவிர பாவங்களை எவரும் மன்னிக்க முடியாது. எனவே மன்னிப்பு வழங்குவாயாக! மேலும் எனக்கு அருள் புரிவாயாக! நிச்சயமாக நீ மன்னிப்பவனும் அருள் புரிபவனுமாவாய்.

அறிவிப்பாளர்: அபூபக்ர்(ரலி) அவர்கள, புகாரி 834, 6326

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

4

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

رَبِّ اغْفِرْ لِي خَطِيئَتِي وَجَهْلِي وَإِسْرَافِي فِي أَمْرِي كُلِّهِ وَمَا أَنْتَ أَعْلَمُ بِهِ مِنِّي اللَّهُمَّ اغْفِرْ لِي خَطَايَايَ وَعَمْدِي وَجَهْلِي وَهَزْلِي وَكُلُّ ذَلِكَ عِنْدِي اللَّهُمَّ اغْفِرْ لِي مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ أَنْتَ الْمُقَدِّمُ وَأَنْتَ الْمُؤَخِّرُ وَأَنْتَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

ரப்பிக்(غ)பி(ف)ர்லீ க(خ)தீஅதீ, வ ஜஹ்லீ, வ இஸ்ராபி(ف) பீ(ف) அம்ரீ குல்லிஹி, வமா அன்த அஃலமு பிஹி மின்னீ, அல்லாஹும்மக்(غ)பி(ف) ர்லீ க(خ)தாயாய, வ அம்தீ, வ ஜஹ்லீ, வ ஜத்தீ வ குல்லு தாலிக இந்தீ. அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லீ மா கத்தம்து, வ மா அஹ்(خ)ஹர்து வமா அஸ்ரர்து வமா அஃலன்து, அன்தல் முகத்திமு, வ அன்தல் முஅஹ்(خ)ஹிரு, வ அன்த அலா குல்லி ஷையின் கதீர்.

என் இறைவா! என் குற்றங்களையும், என் அறியாமையையும், என் செயல்கள் அனைத்திலும் நான் மேற்கொண்ட விரயத்தையும் மன்னித்திடுவாயாக. மேலும், என்னை விட நீ எவற்றையெல்லாம் அறிந்துள்ளாயோ அவற்றையும் மன்னித்திடுவாயாக. இறைவா! நான் தவறுதலாகச் செய்ததையும், வேண்டுமென்றே செய்ததையும், அறியாமல் செய்ததையும், அறிந்து செய்ததையும் மன்னித்திடுவாயாக. இவை யாவும் என்னிடம் இல்லாமலில்லை. இறைவா! நான் முன்னால் செய்ததையும், பின்னால் செய்ததையும், இரகசியமாகச் செய்ததையும் பகிரங்கமாகச் செய்ததையும் மன்னித்திடுவாயாக. நீயே முன்னேற்றம் அடையச் செய்பவன். பின்னடைவு ஏற்படச் செய்பவனும் நீயே! நீ அனைத்தின் மீதும் ஆற்றல் பெற்றவன்

அறிவிப்பாளர்: அபூ மூஸா(ரலி) அவர்கள், புகாரி 6398

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

5

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْجُبْنِ وَأَعُوذُ بِكَ أَنْ أُرَدَّ إِلَى أَرْذَلِ الْعُمُرِ وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الدُّنْيَا وَأَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் ஜுப்னி,
வஅஊது பிக அன் உரத்த இலா அர்தலில் உமுரி,
வ அஊது பிக மின் ஃபித்னத்தித் துன்யா,
வஅஊது பிக மின் அதாபில் கப்ரி

'இறைவா! நான் கோழைத்தனத்திலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்; தள்ளாத வயது வரை நான் வாழ்வதை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்; உலகின் சோதனைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்; புதைகுழியின் வேதனையிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்'

அறிவிப்பாளர்: ஸஅத் இப்னு அபீவக்காஸ்(ரலி) அவர்கள், புகாரி 2822

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

6/1

اللَّهُمَّ بِعِلْمِكَ الْغَيْبَ، وَقُدْرَتِكَ عَلَى الْخَلْقِ، أَحْيِنِي مَا عَلِمْتَ الْحَيَاةَ خَيْرًا لِي، وَتَوَفَّنِي إِذَا عَلِمْتَ الْوَفَاةَ خَيْرًا لِي، اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ خَشْيَتَكَ فِي الْغَيْبِ وَالشَّهَادَةِ، وَأَسْأَلُكَ كَلِمَةَ الْحَقِّ فِي الرِّضَا وَالْغَضَبِ، وَأَسْأَلُكَ الْقَصْدَ فِي الْغِنَى وَالْفَقْرِ، وَأَسْأَلُكَ نَعِيمًا لَا يَنْفَدُ، وَأَسْأَلُكَ قُرَّةَ عَيْنٍ لَا تَنْقَطِعُ، وَأَسْأَلُكَ الرِّضَا بَعْدَ الْقَضَاءِ، وَأَسْأَلُكَ بَرْدَ الْعَيْشِ بَعْدَ الْمَوْتِ، وَأَسْأَلُكَ لَذَّةَ النَّظَرِ إِلَى وَجْهِكَ، وَالشَّوْقَ إِلَى لِقَائِكَ، فِي غَيْرِ ضَرَّاءَ مُضِرَّةٍ، وَلَا فِتْنَةٍ مُضِلَّةٍ، اللَّهُمَّ زَيِّنَّا بِزِينَةِ الْإِيمَانِ، وَاجْعَلْنَا هُدَاةً مُهْتَدِينَ

அறிவிப்பாளர்: அம்மார் இப்னு யாஸிர்(ரலி) அவர்கள், நூல்: நஸயீ 1288

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

6/2

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

அல்லாஹும்ம பி இல்மிகல் கைப வ குத்ரத்திக அலல் கல்கி, அஹ்யினி மாஅலிம்தல் ஹயாத கைரன்லீ வதவஃப்பனீ இதா அலிம்தல் வஃபாத கைரன்லீ அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக கஷ்யதக ஃபில் கைபி வஷ்ஷஹாததீ. வஅஸ்அலுக கலிமதல் ஹக்கி ஃபிர்ரிளா வல் களபி வஅஸ்அலுகல் கஸ்த ஃபில்கினா வல்ஃபக்ரி  வஅஸ்அலுக நயீமன் லாயன்ஃபது அ வஅஸ்அலுக குர்ரத அய்னின் லா தன்கதிஃ வ அஸ்அலுகர் ரிளாஅ பஃதல் களாயி வ அஸ்அலுக பர்தல் அய்ஷி பஃதல் மவ்தி வ அஸ்அலுக லத்தத்தன் நள்ரி இலா வஜ்ஹிக வஷ்ஷவ்க இலா லிகாயிக ஃபீ கைரி ளர்ராஅ முளிர்ரத்தின் வலா ஃபித்னதின் முளில்லதின் அல்லாஹும்ம ஸ(Z)ய்யின்னா பி ஸீ(Z)னதில் ஈமானி வஜ்அல்னா ஹுதாத்தன் முஹ்ததீன்

யா அல்லாஹ்! மறைவானதைப் பற்றிய உன்னுடைய அறிவினால் மற்றும் படைப்பினங்களின் மீதுள்ள ஆற்றலினால், வாழ்வது எனக்கு நன்மையாக இருக்குமென நீ அறிந்திருப்பின் என்னன வாழவைப்பாயாக! மேலும், மரணிப்பது எனக்கு மிகச்சிறந்ததாக நீ அறிந்திருந்தால், என்னை மரணிக்கச் செய்வாயாக! யா அல்லாஹ்! மறைவிலும், வெளிப்படையிலும் உன்னுடைய பயத்தை நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கிறேன். பொருத்தத்திலும், கோபத்திலும் உண்மையான வார்த்தையை (நான் கூற நல் உதவி நல்கிட) உன்னிடம் நான் கேட்கிறேன். செல்வத்திலும், வறுமையிலும் நிதானத்தை உன்னிடம் நான் கேட்கிறேன். முடிவில்லாத அருட்கொடையையும் உன்னிடம் நான் கேட்கிறேன்; துண்டித்து விடாத கண்குளிர்ச்சியையும் உன்னிடம் நான் கேட்கிறேன். உனது தீர்ப்பிற்குப் பிறகு பொருந்திக் கொள்வதையும் உன்னிடம் நான் கேட்கிறேன். மரணத்திற்குப் பிறகு குளிர்ச்சியான வாழ்வையும் உன்னிடம் நான் கேட்கிறேன். உன்னுடைய  முகத்தைப் பார்க்கின்ற இன்பத்தையும், இடரு செய்யும் இடரின்றி மற்றும் வழி கெடுத்து விடக்கூடிய குழப்பமுமின்றி உன்னுடைய சந்திப்பின் பால் பேரார்வத்தையும் உன்னிடம் நான் கேடகிறேன். யா அல்லாஹ்! ஈமானுடைய அழகினால் எங்களை அலங்கரிப்பாயாக! இன்னும் நேர்வழியுடையோராக நேர்வழி பெற்றவராக எங்களை நீ ஆக்குவாயாக!

அறிவிப்பாளர்: அம்மார் இப்னு யாஸிர்(ரலி) அவர்கள், நூல்: நஸயீ 1288

هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

7/1

اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنَ الْخَيْرِ كُلِّهِ عَاجِلِهِ وَآجِلِهِ ،
مَا عَلِمْتُ مِنْهُ وَمَا لَمْ أَعْلَمْ ، وَأَعُوذُ بِكَ مِنَ
الشَّرِّ كُلِّهِ عَاجِلِهِ وَآجِلِهِ ، مَا عَلِمْتُ مِنْهُ وَمَا لَمْ
أَعْلَمْ ، اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ خَيْرِ مَا سَأَلَكَ
عَبْدُكَ وَنَبِيُّكَ ، وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا عَاذَ بِهِ
عَبْدُكَ وَنَبِيُّكَ ، اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْجَنَّةَ وَمَا
قَرَّبَ إِلَيْهَا مِنْ قَوْلٍ أَوْ عَمَلٍ ، وَأَعُوذُ بِكَ مِنَ
النَّارِ وَمَا قَرَّبَ إِلَيْهَا مِنْ قَوْلٍ أَوْ عَمَلٍ ، وَأَسْأَلُكَ
أَنْ تَجْعَلَ كُلَّ قَضَاءٍ قَضَيْتَهُ لِي خَيْرًا .

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், இப்னுமாஜா 3846

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

7/2

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க மினல் கைரி குல்லிஹி ஆஜிலிஹி வஆஜிலிஹி மா அலிம்த்து மின்ஹு வமாலம் அஃலம் வ அவூது பிக்க மினஷ் ஷர்ரி குல்லிஹி ஆஜிலிஹி வ ஆஜிலிஹி மா அலிம்த்து மின்ஹு வமாலம் அஃலம் அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க மின் ஹைரி மா ஸஅலக்க அப்துக வநபிய்யுக வ அவூது பிக மின்ஷர்ரி மாஆத பிஹி அப்துக வநபிய்யுக அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் ஜன்னத்த வமா கர்ரப இலைஹா மின் கவ்லின் அவ் அமலின் வ அவூது பிக மினனன் நாரி வமா கர்ரப இலைஹா மின் கவ்லின் அவ் அமலின் வ அஸ்அலுக்க அன் தஜ்அல குல்ல களாயின் கலைத்தஹு லீ கைரன்

யா அல்லாஹ் ! நான் உன்னிடம் நான் அறிந்த அறியாத அவசரமான, தாமதமான அனைத்து விதமான நலவுகளிலிருந்தும் கேட்கிறேன். யா அல்லாஹ் ! நான் உன்னிடம் நான் அறிந்த அறியாத அவசரமான தாமதமான அனைத்து கெடுதிகளிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். யா அல்லாஹ் ! உனது அடியாரும், தூதரும் உன்னிடம் கேட்ட அனைத்து நலவுகளையும் உன்னிடம் கேட்கிறேன். யா அல்லாஹ் ! உனது அடியாரும், தூதரும் உன்னிடம் பாதுகாப்புத் தேடிய அனைத்து கெடுதிகளிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். சுவனத்தின் பால் நெருக்கி வைக்கும் சொற்களையும் அல்லது செயல்களையும் நான் உன்னிடம் கேட்கிறேன், நரகத்தின் பால் நெருக்கிவைக்கும் சொற்களையும் அல்லது செயல்களையும் விட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். யா அல்லாஹ் ! நீ எனக்கு முடிவு செய்த அனைத்தையும் நன்மையாக இருப்பதை உன்னிடம் கேட்கிறேன்

**அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், இப்னுமாஜா 3846**

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

8

اللَّهُمَّ أَعِنِّي عَلَى ذِكْرِكَ
وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ

அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக
வஷுக்ரிக, வஹுஸ்னி இபாததிக

யா அல்லாஹ்! நான் உன்னை நினைவு
கூறுவதற்கும், உனக்கு நன்றி செலுத்துவதற்கும்,
உன்னை அழகிய முறையில் வணங்குவதற்கும்
எனக்கு அருள் புரிவாயாக !

அறிவிப்பாளர்: முஆத் பின் ஜபல்(ரலி) அவர்கள், அபூதாவூத் 1524

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

9

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا عَمِلْتُ وَمِنْ شَرِّ مَا لَمْ أَعْمَلْ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மின் ஷர்ரி மா அமில்து வமின் ஷர்ரி மா லம் அஃமல்

யா அல்லாஹ்! நான் செய்தவற்றின் தீங்கை விட்டும், செய்யாதவற்றின் தீங்கை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், நஸாயீ 1307

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

10

اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْجَنَّةَ وَأَعُوذُ بِكَ مِنَ النَّارِ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்கல் ஜன்னத வ அவூது பிக மினன்னார்

யா அல்லாஹ் ! நான் உன்னிடம் சுவர்க்கத்தைக் கேட்கிறேன். நரகை விட்டுப் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அபூதாவூத் 792

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليات بالخبـر

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

11

اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ يَا اللَّهُ بِأَنَّكَ الْوَاحِدُ الأَحَدُ الصَّمَدُ الَّذِي لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ وَلَمْ يَكُنْ لَهُ كُفُوًا أَحَدٌ أَنْ تَغْفِرَ لِي ذُنُوبِي إِنَّكَ أَنْتَ الْغَفُورُ الرَّحِيمُ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க யா அல்லாஹு பி அன்னகல் வாஹிதுல் அஹதுஸ்(ص)ஸமதுல்லதீ லம்யலித் வலம் யூலத் வலம் யகுன்லஹு குபு(ف)வன் அஹத் அன் தக்(غ)பி(ف)ரலீ துனூபி இன்னக அன்தல் க(غ)பூ(ف)ருர் ரஹீம்

யாஅல்லாஹ்! நிச்சயமாக நீ தனித்தவன்,ஒருவன், தேவையற்றவன், (எவரையும்) பெறாதவன், (எவராலும்) பெறப்படாதவன், தனக்கு நிகராக எவரும் இல்லையே அத்தகையவனாகிய அல்லாஹ்வே என் பாவங்களை எனக்காக பொருத்து அருளுமாறு நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கிறேன். நிச்சயமாக நீதான் மிகுந்து பொருத்து அருள்பவன். நிகரில்லாத அன்புடையோன்.

அறிவிப்பாளர்: ஹன்ழ(ظ)லஹ் பின் அலி (ரலி) அவர்கள், நஸாயீ 1301

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

12

اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ بِأَنَّ لَكَ الْحَمْدَ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ الْحَنَّانُ الْمَنَّانُ بَدِيعُ السَّمٰوَاتِ وَالْأَرْضِ يَا ذَا الْجَلَالِ وَالْإِكْرَامِ يَا حَيُّ يَا قَيُّومُ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க பி அன்ன லகல் ஹம்த லா இலாஹ இல்லா அன்தல் ஹன்னானுல் மன்னானு பதீஉஸ்ஸமாவாதி வல் அர்ளீ யாதல் ஜலாலி வல் இக்ராம். யா ஹய்யு யா கய்யூம்.

யா அல்லாஹ்! உனக்கே புகழ் அனைத்தும் உரியது என்பதைக் கொண்டு நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கிறேன். வணங்கப்படுபவன் உன்னையல்லாது (வேறு எவரும்) இல்லை. அருளாளன், அளவில்லாது நன்மைகளை நல்குபவன்; வானங்கள், மற்றும் பூமியை முன் மாதிரியின்றிப் படைத்தவன்! கண்ணியம் மற்றும் சங்கை உடையவன்! என்றென்றும் உயிருள்ளவன், நிலையானவன்!

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், அபூதாவூத் 1495

# தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்கள்

13

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اللَّهُمَّ اغْفِرْ لِي مَا قَدَّمْتُ وَمَا أَخَّرْتُ وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ وَمَا أَسْرَفْتُ وَمَا أَنْتَ أَعْلَمُ بِهِ مِنِّي أَنْتَ الْمُقَدِّمُ وَأَنْتَ الْمُؤَخِّرُ لَا إِلَهَ إِلَّا أَنْتَ

அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லீ மா கத்தம்து, வ மா அஹ்(خ)ஹர்து வமா அஸ்ரர்து வமா அஃலன்து, வமா அஸ்ரப்(ف)து வமா அன்த அஃலமு பிஹி மின்னி அன்தல் முகத்திமு வ அன்தல் முஅஹ்(خ)ஹிரு லா இலாஹ இல்லா அன்த

நான் முந்திச் செய்ததையும், பிந்திச் செய்வதையும், நான் இரகசியமாகச் செய்ததையும், வெளிப்படையாகச் செய்ததையும், நான் வரம்பு மீறி நடந்து கொண்டதையும், என்னிடமிருந்து எதை நீ அறிந்து வைத்துள்ளாயோ அதையும் மன்னிப்பாயாக. நீயே முற்படுத்துபவன். நீயே பிற்படுத்துபவன். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை.

அறிவிப்பாளர்: அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1419